## ரோமர் / Romans 2:7

சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச்செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.

eternal life to those who by **patient continuance** in doing good seek for glory, honor, and immortality; (NKJV)

தேவனுடைய வேதம் ஜீவனுள்ளது: நமக்கு ஜீவனைக் கொடுக்கவும் அதைப் பரிபூரணப்படுத்தவும் வல்லமை கொண்டது.
Bible is the Living Word. This will give us Life and make our Life in Full.

Ref: Dictionary: நித்தியஜீவன்: நிலையான வாழ்க்கை, முடிவில்லாத வாழ்க்கை
Eternal Life: without beginning or end; lasting forever; always existing

இப்படி ஒரு நிலையான வாழ்க்கை கடவுளோடு நமக்கு இருக்கிறது என்று ஏதோ ஒரு வகையிலே ஒவ்வொரு மக்களும் நம்புகிறார்கள். அவர்கள் அறிந்த அளவிலே அந்த கடவுளை அடைய காரியங்களை மிகவும் பயபக்தியோடு செய்கிறார்கள்.

Everyone may believe there is a life after death and they try to do some thing with great devotion as they know.

நாம் நல்லது செய்தால் போதும். நாம் இறந்தபிறகு கடவுளோடு இருப்போம்....இது ஒரு நம்பிக்கை. "எந்த அளவிற்கு நல்லது செய்தால்...?" என்பதற்கு அவரவர்கள் ஒரு எல்லையைக் குறித்துக்கொண்டு, "இதைச் செய்தால் போதும்.." என்று ஒரு தீர்மானம் எடுத்துக் கொள்கிறார்கள்.

எவ்வளவு நல்லது செய்தால், நம் அனைத்து பாவங்களும் நீங்கி நாம் பரிசுத்தமாகலாம்?
சிந்தித்துப் பாருங்கள் ! ***(நல்லதும் கெடுதலும் மாறி மாறி வரும் வாழ்க்கையில்.... !?)***

"If you do the Good things, you will be with God" Many live in this believe.
How much you do Good things? – they just comeup with some measure as they like and live with it.
There is NO logic on this believe.

How much Good will clear all of our sins and make us Holy? Think about this….
***(In our life Good, sin are mixed always…..!?)***

வேதம் சொல்கிறது: "சோர்ந்துபோகாமல் **நற்கிரியைகளைச்செய்து**..." **patient continuance** in **doing good**
patient continuance – think about these 2 words…… (சோர்ந்துபோகாமல்...தொடர்ந்து...உறுதியில் நிலைத்திருந்து...)

நல்ல காரியங்களைச் செய்து, ஆனால் தேவனைத் தேடாமல் வாழ்கிறவர்களும் பலர் உண்டு.
நல்ல காரியத்தை அவசியம் நாம் செய்யவேண்டும். நல்ல காரியங்கள் செய்வதால்மட்டும், நாம் நல்லவர்களாகவோ நீதிமான்களாகவோ (பரிசுத்தவான்களாக) ஆகமுடியாது.
நற்கிரியைகளைச் செய்து **கடவுளைத்தேடும்போது**, கடவுள் நம்மை நீதிமான்களாக ஆக்கமுடியும்.
பரிசுத்தமான கடவுள் ஒருவரால்தான், நாம் நீதிமானாகமுடியும், பரிசுத்தமாகமுடியும்.
நீதிமான்களுக்குத்தான் (பரிசுத்தவான்களுக்குத்தான்) நித்தியஜீவன் உண்டு.

Many are doing Good things, but they do not seek God.
We must do Good Things. Doing Good Things can not make us Righteous.
When we do Good Things AND **seek God**, God can make us Righteous and give Everlasting Life.

வேதம் சொல்கிறது: மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.
Bible Says: Those who seek for glory, honor, and immortality. God will give eternal life.

Ref: Dictionary: seek: to seek [in order to find out] by thinking, meditating, reasoning, to enquire into
தேடுவது என்ற வார்த்தை: தேடி ஆராய்ந்து கண்டுபிடித்து தியானித்து அறிந்துகொள்வது.

கடவுளைத் தேடுபவர்கள் எல்லோரும் கடவுளை அறிந்துகொள்ள முயற்சிசெய்வதில்லை.
All of them who seek God are not trying to understand the nature of God.

ஒவ்வொருவரும் கடவுளை வழிபடும்போது……..
மகிமை, கனம், அழியாமை….இந்த மூன்றையும் உடையவர் கடவுள் என்பதை,
தேடி, ஆராய்ந்து, தியானித்து, அறிந்துகொள்ள முயற்சிப்பார்களானால்,
கடவுள் அவர்களைத் தெரிந்தெடுத்து ஆசீர்வதித்து நித்தியஜீவனை அளிப்பார். ஆமென்.

When everyone worship God, if they try to seek and find out that
the God they worship is having glory, honor, and immortality;
Then God will sure explore his nature to them and chose them for His Glory.

தொடர்ந்தும் இந்த ஜீவனுள்ள வசனத்தை மேலும் தியானித்தால் இன்னும் எவ்வளவோ கருத்துக்களை கர்த்தர் உங்களுக்கு அருளிச்செய்து ஆட்கொண்டு ஆசீர்வதிப்பார். ஆமென்.
Please continue to read the Living word of God. You will explore many great understanding.

மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் உடைய தேவனாகிய இயேசுகிறிஸ்துவை அறிந்து அவரது வார்த்தைகளை தொடர்ந்து தினமும் வாசித்து தியானித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்..
Lord Jesus Christ is the one who got glory, honor, and immortality. Please read his living Word further.
God Bless You. Let us Pray